**செ.வெ.எண்: 46** **நாள்: 12.08.2021**

**விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவிருக்கின்ற ஊரக உள்ளாட்சி தேர்தல் - 2021 முன்னிட்டு விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சார்ந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான தேர்தல் பயிற்சி மற்றும் ஆயத்தப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர்.வெ.பழனிகுமார்.இ.ஆ.ப, (ஓய்வு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறவிருக்கின்ற ஊரக உள்ளாட்சி தேர்தல் - 2021 முன்னிட்டு விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சார்ந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கான தேர்தல் பயிற்சி மற்றும் ஆயத்தப்பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர்.வெ.பழனிகுமார்.இ.ஆ.ப, (ஓய்வு) அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர்.வெ.பழனிகுமார்.இ.ஆ.ப, (ஓய்வு) அவர்கள் பேசியதாவது :-

நமது இந்திய அரசியலமைப்பின்படி ஜனநாயகத்தினை காத்திடும் பொருட்டு ஐந்து வருடத்திற்கு ஒரு முறை தேர்தல் நடத்தப்படுவது நடைமுறையாக இருந்து வருகிறது. அவ்வாறு நடைபெறும் தேர்தல் மிகவும் கட்டுப்பாட்டுடனும், நடுநிலையுடனும், பாதுகாப்புடனும் நடைபெற வேண்டும். எனவே, அவ்வாறு நடுநிலையுடன் தேர்தல் பணியாற்ற இருக்கின்ற அலுவலர்களாகிய நாம் அனைவரும் தேர்தல் குறித்த அனைத்து விவரங்களையும் முழுமையாக அறிந்திருக்க வேண்டும்.

தேர்தலை பொறுத்தவரையில் வாக்காளர் பட்டியல் மற்றும் வாக்குச்சாவடி பட்டியல் தயாரித்தல், தேர்தல் கண்காணிப்பு பணிகள், தேர்தல் நன்னடத்தை விதிகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு தேர்தல் குறித்த முக்கிய பணிகள் உள்ளடங்கியுள்ளது.

ஆகவே, இந்த ஆய்வுக்கூட்டத்திற்கு வந்துள்ள விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டங்களைச் சேர்ந்த தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் இக்கூட்டத்தில் அளிக்கப்படும் பயிற்சிகளை முறையாக அறிந்து கொண்டு தேர்தல் பணியாற்ற வேண்டும். மேலும், தேர்தல் பணிகள் குறித்து தங்களுக்கு ஏற்படுகின்ற சந்தேகங்களை வெளிப்படுத்தி இக்கூட்டத்தின் வாயிலாக தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும் என தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர்.வெ.பழனிகுமார்.இ.ஆ.ப, (ஓய்வு) அவர்கள் தெரிவித்தார்.

இதனை தொடர்ந்து ஊரக உள்ளாட்சி தேர்தலுக்காக விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் வெளியிடப்பட்ட இறுதி வாக்குச்சாவடி பட்டியல் மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் நியமனம் மற்றும் தேர்தல் முதற்கட்ட ஆயத்தப்பணிகள் குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி.எ.சுந்தரவள்ளி.இ.ஆ.ப, அவர்கள் விரிவாக ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து தேர்தல் நடத்துவதற்கு தேவையான அனைத்து உபகரணங்கள், உரிய படிவங்கள் மற்றும் அவசிய பொருட்கள் தயார் நிலையில் வைத்திருத்தல், வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வேட்பு மனு வழங்குதல், வேட்பு மனு பரிசீலனை உள்ளிட்ட நடவடிக்கைகள் குறித்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள்/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் முனைவர்.வெ.பழனிகுமார்.இ.ஆ.ப, (ஓய்வு) அவர்கள் தலைமையில் தேர்தல் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய செயலாளர் திருமதி.எ.சுந்தரவள்ளி.இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.மோகன்.இ.ஆ.ப., கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பி.என்.ஸ்ரீதர்.இ.ஆ.ப., விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர்.ந.ஸ்ரீநாதா.இ.கா.ப, கள்ளக்குறிச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜியாவுல்ஹக்.இ.கா.ப., தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய முதன்மை தேர்தல் அலுவலர் (ஊராட்சிகள்) திரு.க.அருண்மணி, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணைய முதன்மை தேர்தல் அலுவலர் (நகராட்சிகள்) திருமதி.கு.தனலட்சுமி மற்றும் ஆணைய அலுவலர்கள் பங்கேற்றனர்

…………………………………………………………………………………..

வெளியீடு :செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் - விழுப்புரம்